ஸ்டெர்லைட்டை மூட வேண்டும் என்பதை வழக்காக தாக்கல் செய்தால் விசாரணை

உயர்நீதிமன்ற நீதிபதிகள் கருத்து

மதுரை, டிச.19- ஸ்டெர்லைட் ஆலையை மூட வேண்டும் என்பதை வழக்காக தாக்கல் செய்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று உயர்நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர்.மக்களையும் சுற்றுச்சூழலையும் பாதித்த தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி மக்கள் நடத்திய போராட்டத்தில் 13 பேரை காவல்துறையினர் சுட்டுக்கொன்றனர். அதன்பின்னரே தமிழக அரசு ஆலையை மூடி சீல் வைத்தது.தமிழக அரசின் உத்தரவை எதிர்த்து ஸ்டெர்லைட் ஆலை தரப்பில் தில்லியில் உள்ள பசுமை தீர்ப்பாயத்தில் முறையீடு செய்யப்பட்டது. இதையடுத்து ஸ்டெர்லைட் ஆலையை உடனடியாக திறக்க வேண்டும். ஆலைக்கு தேவையான மின்சார வசதியை வழங்க வேண்டும் என்று பசுமை தீர்ப்பாயம் அளித்த உத்தரவால் மக்கள் அதிர்ச்சியும் கோபமும் அடைந்தனர். இந்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.இந்நிலையில் புதனன்று தூத்துக்குடியைச் சேர்ந்த பாத்திமா சார்பில் வழக்கறிஞர் ஹென்றி டிபேன், உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிபதிகள் சசிதரன், ஆதிகேசவலு முன்பு ஆஜராகி, ஸ்டெர்லைட் ஆலையை திறக்க வேண்டும் என்ற பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவுக்கு பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டுதடை விதிக்க வேண்டும் என்று முறையிட்டார்.இதனை வழக்காக தாக்கல் செய்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்